01.07.2025

அ.வ.எண். 111/2018

வா.சா.2 - கோபாலகிருஷ்ணன், த/பெ. பழனிக்கவுண்டர்

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 01.07.2025 is accordance with the provision of Act X of 3331

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. 3 ம் வாதி சுந்தரேசன் அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்தேன். நானும், வாதிகளும் நெருங்கிய உறவினர்கள். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியும். சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான் சொல்லி பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது.

2. 03.06.1991 ல் ஏற்பட்ட பாகசாசன பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பாகசாசன பத்திரத்தை படித்து பார்க்காமல் எனது பிரமாண வாக்குமூலத்தில் 3 ம் பத்தியில் தாவா சொத்தில் மொத்தம் உள்ள ஏக்கர் 1.18 சென்ட்டில்-ல், 59 சென்ட் வாதிகளுக்கும், 59 சென்ட் நிலம் 1 ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என எவ்வாறு சொல்கிறேன் என்றால் 1 ம் வாதி சொன்னார். பாகசாசனத்தை பார்க்காத நிலையில் நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் வாதி 148/2F காலையில் தனக்கு ஒதுக்கப்பட்ட B பாக சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்று சொல்வது தவறு என்றால் 1 ம் வாதி சொல்லி தெரியும்.

3. 1 ம் வாதிக்கு 148/2F காலை ஒதுக்கப்படவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3 ம் வாதி, தனி சுவாதீனத்தில் இருந்து வருவதற்கான ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனக்கு வழக்கிற்கான மூல காரணம் தெரியாது என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளகூடாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur